# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.131/2021

**06.02.2023 -வா.சா. 1 மாதவன் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். வேறு எந்த வருமானமும் இல்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் என்னுடைய ஆசிரியர் அந்த வகையில் 1ம் பிரதிவாதியை தெரியும். நெருக்கமான பழக்கம் இல்லை. நாங்கள் இருவரும் சேர்ந்து எந்த தொழிலும் செய்யவில்லை. அவருக்கு வேறு ஏதாவது கடை இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் பெற்றுக்கொள்ளும்படி என்னிடம் கேட்டார். 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு ரூ.26 லட்சம் விலை நிர்ணயம் செய்தார். அவர் சுற்றுலா பேருந்து வாங்கப் போவதாகவும், இதர கடன்களை அடைக்கப்போவதாகவும் சொல்லி விற்பனை செய்யப் போவதாக சொன்னார். முன்பணமாக ரூ.25,75,000/- கொடுத்தேன். மேற்சொன்ன முன்பணத் தொகையை சிறுக சிறுக கொடுத்தேன். அத்தொகையினை 5 - 6 தவணைகளில் கொடுத்தேன். எந்தெந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் அவ்வாறு பணம் கொடுக்கும் போது 1ம் பிரதிவாதியின் மனைவி உடன் இருந்தார். 3ம் நபர் யாரும் இல்லை. கிரைய ஒப்பந்தத்தை போளூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எழுத்தர் சங்கர் என்பவர் எழுதினார். தாவா கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்டது. அதில் மணிவண்ணன், சிவக்குமார் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள். இருவரும் பொதுவான சாட்சிகள். பத்திரம் எழுதுவர் அவர் வைத்திருக்கும் பதிவேட்டில் எந்த கையெழுத்தும் வாங்கவில்லை. பலமுறை பாக்கி கிரைய தொகையை பெற்றுக்கொண்டு கிரையம் முடித்தும் தரும் படி கேட்டேன். 1ம் பிரதிவாதி காலம்தாழ்த்தி வந்தார். தாவா சொத்து சம்மந்தமாக 1ம் பிரதிவாதி 3 முறை கிரைய ஒப்பந்தம் போட்டு பணத்தை திருப்பி கொடுத்து விட்டார். மேற்சொன்ன ஏற்கனவே ஏற்பட்ட கிரைய ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்டது. பணத்தை கொடுத்தவுடன் கிரைய ஒப்பந்தங்கள் ரத்து செய்யப்பட்டது. 2015, 2016, 2017 ஆகிய ஆண்டுகளில் கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. மேற்சொன்ன மூன்று ஒப்பந்தங்கள் 1ம் பிரதிவாதி வட்டியுடன் பணம் கொடுத்ததால் ரத்து செய்யப்பட்டு விட்டன. தாவா கிரைய ஒப்பந்தம் எங்களுக்குள் 4வது முறையாக ஏற்படுத்தப்பட்டது. 1ம் பிரதிவாதியின் வற்புறுத்தலின் பேரில் தாவா கிரைய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. கடனாக 1ம் பிரதிவாதி அவ்வப்போது பணம் வாங்கினார். 1ம் பிரதிவாதி வட்டியுடன் எனக்கு சேர

வேண்டிய பணத்தை கொடுத்தால் தாவா கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்ய நான் தயாராக உள்ளேன். நான் வட்டி தொழில் எதுவும் செய்யவில்லை. தாவா சொத்தின் சந்தை மதிப்பு தெரியாது. சந்தை மதிப்பை பற்றி நான் விசாரிக்கவில்லை. தாவா பணத்திற்கு பிரதிவாதி வட்டி செலுத்தவில்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/-மாதவன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.